காரமடை நகர்மன்ற அலுவலகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவரசக்கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு.கே.பால்ராஜ், தனி அலுவலர் அவர்கள்**

**பொருள் எண்.01**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தற்போதுள்ள வார்டுகளுக்கு 2011ம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு வார்டுகளை மறுவரையறை செய்ய அரசாணை (நிலை) எண்.127, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.16.12.2021-ன்படியும், தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் கடிதம் எண் Rc.No.DC/5439/2021,நாள்.17.12.2021–ன் வழிகாட்டுதலின்படியும், நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளுக்கு வார்டு மறுவரையறையின்படியும் கருத்துருக்கள் தயாரித்தலுக்கான வழிமுறைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஏற்கனவே உள்ள காரமடை பேரூராட்சியின் 18 வார்டுகளை தற்போது 27 நகராட்சி வார்டுகளாக மறுவரையறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வார்டுகள் மறுவரையறை செய்து கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யவும், தனி அலுவலரின் அனுமதிக்கு.

(ஏ1/1879/2021)

**பொருள் எண்.02**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தற்போதுள்ள வார்டுகளுக்கு 2011ம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு வார்டுகளை மறுவரையறை செய்ய அரசாணை (நிலை) எண்.127, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.16.12.2021-ன்படியும், தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் கடிதம் எண் Rc.No.DC/5439/2021,நாள்.17.12.2021–ன் வழிகாட்டுதலின்படியும், நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளுக்கு வார்டு மறுவரையறையின்படியும் கருத்துருக்கள் தயாரித்தலுக்கான வழிமுறைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஏற்கனவே உள்ள காரமடை பேரூராட்சியின் 18 வார்டுகளை தற்போது 27 நகராட்சி வார்டுகளாக மறுவரையறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வார்டுகள் மறுவரையறை செய்து கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யவும், கருத்து கேட்பு கூட்டம், விளம்பரங்கள் மற்றும் பேரூராட்சி என்பதனை நகராட்சி என பல இடங்களில் பெயர்மாற்றம் செய்யவும் மற்றும் நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்-2022 நடைபெறவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்படவேண்டிய கீழ்கண்ட செலவினங்கள் தோராயமாக ரூ..36.00 இலட்சம் (ரூபாய் முப்பத்தி ஆறு இலட்சம் மட்டும்) தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

1) வாக்காளர் பட்டியல் அச்சிடும் செலவினம், 2) விளம்பரச் செலவினம், 3) வாக்குப்பதிவு அலுவலர் / வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கான ஊதியம், 4) தேர்தல் வாகனச் செலவினம், 5) சி.சி.டி.வி கேமரா செலவினம், 6) தேர்தல் பொருட்கள் செலவினம், 7) இதர நிர்வாக செலவினங்கள்

**அகு :-** அவசர அவசியத்தினை முன்னிட்டு மேற்கண்ட செலவினங்களை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் அவ்வப்போது மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ஏ1/1879/2021)

**தீர்மானம் எண்.01**

அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.02**

அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்/XXXXX)
தனி அலுவலர்
காரமடை நகராட்சி

//உண்மை நகல் //

17/12/21
ஆணையாளர்
காரமடை நகராட்சி
17/12/2021

காரமடை நகர்மன்ற அலுவலகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவரசக்கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு.கே.பால்ராஜ், தனி அலுவலர் அவர்கள்**

**பொருள் எண்.01**

காரமடை நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் 31.03.2022 ஆகும் செலவினம் ரூ.20000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மற்றும் தேவைப்படும் படிவங்கள் எழுதுபொருட்கள் ஆகியவற்றை கூட்டுறவு நிறுவனம், கோயம்புத்தூர் சேவை தொழில் கூட்டுறவு அச்சகம் அவர்களிடம் அவர்களிடம் கொள்முதல் செய்யவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ஆகு :-** அவசர அவசியத்தினை முன்னிட்டு மேற்கண்ட செலவினங்களை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ஏ1/07/2021)

**பொருள் எண்.02**

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை பேரூராட்சி கிட்டாம்பாளையம் பூஸ்டர் டேங்க் 75 HP மின் மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதால் குடிநீர் விநியோகம் செய்ய தடை ஏற்படுவதால் புதிய மின்மோட்டார் வாங்க குடிநீர் பணியாளர் திரு.இ.பாலதண்டாயுதம் விண்ணப்பம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதிய 75 HP மின் மோட்டார் சப்ளை செய்வதற்கான விலை ரூ.6,70,120/- எனவும், புதிய மின்மோட்டார் சப்ளை செய்ய இரண்டு மாதங்கள் ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே காரமடை பேரூராட்சியின் பொது மக்களின் குடிநீர் அவசர அவசியத்தினை முன்னிட்டு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு தற்போது பழுதுதான 75 HP மின் மோட்டாரில் ஏற்பட்டுள்ள பழுதுகளான (1) இம்பளர் (2) பேரிங் (3) புஸ் மற்றும் (4) சாப்ட் ஆகியவற்றை புதிதாக மாற்றியமைக்க விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் தி/வா.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ், 11இ, தம்பு நகர், அரசு பிரஸ் காலனி (அ), கோயம்புத்தூர்-19 அவர்களது குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு ரூ.197650/-க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு.

**ஆகு :-** குடிநீர் அவசர அவசியத்தினை முன்னிட்டும் ஏற்கனவே இப்பணிக்கு செயல் அலுவலராக பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளதால் மேற்கண்ட செலவினங்களை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(ஏ1/05/2021)

**தீர்மானம் எண்.03**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.04**

அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்/XXXXX)
தனி அலுவலர்
காரமடை நகராட்சி

//உண்மை நகல் //

ஆணையாளர்
காரமடை நகராட்சி

27/12/2021

காரமடை நகர்மன்ற அலுவலகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற அவரசக்கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு.கே.பால்ராஜ், தனி அலுவலர் அவர்கள்**

**பொருள் எண்.01**

காரமடை பேரூராட்சி அரசாணை நிலை எண் 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07.12.2021ன் படி நகராட்சியாக் தரம் உயர்த்தப்பட்டு காரமடை நகராட்சியில் 16.12.2021 முற்பகல் நகராட்சி ஆணையாளர் பொறுப்பேற்றுக் கொண்டார் மேற்படி நகராட்சி ஆணையாளர் அவர்களின் நாட்குறிப்பு பதிவு 16.12.2021 முதல் 31.12.2021 முடிய நகர்மன்ற பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:–** பதிவு செய்யலாம்.

(ஏ1/07/2021)

**பொருள் எண்.02**

காரமடை நகராட்சி பார்வை 1ல் காணும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அரசாணை எண் 116 நாள் 07.12.2021ன் படி பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

காரமடை நகராட்சி 27 வார்டுகளையும், 11 குக்கிராமங்களையும் கொண்ட வளர்ந்து வரும் நகராட்சியாகும். இந்நகராட்சி 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 35166 மக்கள் தொகையும் தற்போது 43521 மக்கள் தொகையும் கொண்டுள்ளது. காரமடை நகராட்சியில் 246 எண்ணிக்கையிலான தெருக்களும், 14180 எண்ணிக்கையிலான வீடுகளும், 1486 எண்ணிக்கையிலான வணிக நிறுவனங்களும் மற்றும் 93 எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளும் உள்ளது. 98.346 கி.மீ தார் சாலையும், 20.92 கி.மீ சிமெண்ட் சாலையும், 15.641 கி.மீ மண் சாலையும், 1.130 கி.மீ மெட்டல் மற்றும் பேவர் பிளாக் சாலையும் ஆக மொத்தம் 136.037 சாலை உள்ளது. மேலும் 31.860 கி.மீ நீளம் வடிகால் உள்ளது. 14.72 கி.மீ மாவட்ட / மாநில நெடுஞ்சாலையும் உள்ளது.

நகராட்சியில் 38 தூய்மை பணியாளர்களும், 12 குடிநீர் விநியோக பணியாளர்களும், 92 எண்ணிக்கையிலான சுய உதவிக்குழு பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். காரமடை நகராட்சியில் 67 நிரந்தர காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்கள் உள்ளது. 92 சுய உதவி குழு பணியாளர்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நகராட்சியில் தனி குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல்லித்துறை பகுதியில் பவானி ஆற்றிலிருந்து தலைமை நீரேற்று நிலையம் மூலம் குடிநீர் எடுக்கப்பட்டு தேக்கம்பட்டியில் நீர் சுத்திகரிக்கப்பட்டு கிட்டாம்பாளையம் நீர் உந்து நிலையம் மூலம் குடிநீர் உந்தப்பட்டு நகராட்சி வார்டு பகுதிகளில் உள்ள 17 மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் நகராட்சி வார்டு பகுதிகளில் 72 மின்மோட்டார்கள் பொருத்தப்பட்ட ஆழ்துளை கிணறுகள் மற்றும் 11 திறந்த வெளி கிணறுகள் மூலம் உப்பு நீரும் வழங்கப்படுகிறது. மொத்தம் 25 கி.மீ நீளத்தில் மெயின் குழாய் மூலம் 45.350 கி.மீ நீளம் பகிர்மான குழாயில் பதிக்கப்பட்டு 12083 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேற்கூறிய விபரங்களின் அடிப்படையில் மக்களது அன்றாட அடிப்படை வசதிகளை மேற்பார்வையிடவும், பிற பணிகளை பார்வையிடவும் உரிய வாகன வசதி பேரூராட்சியாக இருந்தபோது இல்லாமல் இருந்துள்ளது. மேலும் தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட பணிமனை மேற்பார்வையிடவும், உடனுக்குடன் பணிகளை கவனித்து தக்க உத்தரவு வழங்க வெளிப்பணிக்கென நகராட்சி ஆணையாளருக்கு ஒரு ஈப்பு வாகனம் வாங்க (வாகன வரி, சாலை வரி மற்றும் இதர செலவினம் சேர்த்து) தோராய செலவினம் ரூ.13.00 இலட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** நிர்வாக நலன் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதிக்கு கருத்துரு சமர்ப்பிக்க அனுமதிக்கலாம்.

(ஏ1/07/2021)

பொருள் எண்.03

காரமடை பேரூராட்சியானது அரசாணை நிலை எண் 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07.12.2021ன் படி நகராட்சியாக் தரம் உயர்த்தப்பட்டு தற்போது நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. காரமடை நகராட்சியில் 27 வார்டுகள், 19.827 ச.கி.மீ பரப்பளவு கொண்டுள்ளது. மேலும் காரமடை நகராட்சியில் தனிக்குடிநீர் திட்டம் மூலம் சுமார் 15 கி.மீ தொலைவில் உள்ள நெல்லித்துறை பவானி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, தேக்கம்பட்டி பகுதியில் குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு, கிட்டாம்பாளையம் பகுதியில் நீர் உந்து நிலையத்தின் மூலம் நீர் உந்தப்பட்டு காரமடை நகராட்சி பகுதியில் உள்ள 17 மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தற்போது நகராட்சியில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் பணிகள் நடைபெற்று வருவதாலும், கொரோனா நோய் தடுப்பு பணிகளை அனைத்து வார்டு பகுதிகளிலும் நேரில் ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளதால், காரமடை நகராட்சிக்கு ஈப்பு வாகனம் வாங்கும் வரை வாடகை அடிப்படையில் ஈப்பு வாகனம் பயன்படுத்த விலைப்புள்ளிகள் பெற்று பயன்படுத்தவும் இதற்காகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:**– நிர்வாக நலன் கருதி அனுமதிக்கலாம்.

(ஏ1/07/2021)

பொருள் எண்.04

காரமடை நகராட்சி அலுவலகத்திற்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம், உரிமக்கட்டணம், பிறப்பு இறப்பு சான்றுகள் பெறுதல் மற்றும் இதர வரியினங்கள் செலுத்த வரும் பொது மக்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அருந்துவதற்கு வைக்கப்பட்டிருந்த குடிநீர் இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி இயந்திரத்தில் குளிந்த நீர் மட்டுமே வருமாறு வடிவமைக்கப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாமல் பழுது ஏற்பட்டுள்ளது. தற்போது கொரோனா பெருந்துதொற்று பரவி வருவதன் காரணமாக பொது மக்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் நலன் கருதி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுடு நீர் மற்றும் சூடு இல்லாத நீர் என இரண்டு வகையில் வருமாறு வாட்டர் டாக்டர் (Water Doctor) இயந்திரம் ஒன்று வாங்கி பொருத்தவும், இதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/- தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:**– பொது மக்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் நலன் கருதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.07//2021/அ2)

தீர்மானம் எண்.05
பதிவு செய்யப்பட்டது.

தீர்மானம் எண்.06
அனுமதிக்கப்பட்டது.

தீர்மானம் எண்.07
அனுமதிக்கப்பட்டது.

தீர்மானம் எண்.08
அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்/XXXXX)
தனி அலுவலர்
காரமடை நகராட்சி

//உண்மை நகல் //

3/1/22
ஆணையாளர்
காரமடை நகராட்சி

31/12/2021